# பொதுக்காலத்தின் பதினேழாம் ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

**இன்றைய வாசகங்கள்:**

தொடக்கநூல் 18:20-32, கொலோசையர் 2:12-14, லூக்கா: 11:1-13

## திருப்பலி முன்னுரை:

பொதுக்காலத்தின் பதினேழாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். இறைவேண்டலின் வல்லமையை உணர்ந்து வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவர் இயேசு, தந்தையாம் இறைவனிடம் தனிமையாக வேண்டிக் கொண்டிருந்த பல நிகழ்வுகள் நற்செய்திகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்று தங்களுக்கும் இறைவேண்டல் செய்யக் கற்றுத்தருமாறு, சீடர்கள் இயேசுவிடம் கோரிக்கை வைக்கின்றனர். அவர்களுக்கு இறைவனிடம் வேண்டக் கற்றுக்கொடுக்கும் இயேசு, அதன் பயனையும் சுட்டிக்காட்டுகிறார். தொடர்ந்து இறைவேண்டல் செய்வோரின் உள்ளுணர்வுகளை ஆண்டவர் புறக்கணிக்கமாட்டார் என்ற பாடத்தை மனதில் இருத்த நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் இயேசுவைப் போன்று இறைவனின் திருவுளம் நம்மில் நிறைவேற வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. அன்புத் தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: அவர்கள் ஒவ்வொருவரும் மக்களின் தேவைகளை அறிந்து, அவர்களின் மீது அக்கறைகொண்டு, இறைவனிடம் பரிந்து பேசும் மாபெரும் பணியானர்களாகத் திகழ சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. திட்டமிட்டு செயல்படுத்துபவராம் இறைவா,**

உலகில் வாழும் நாட்களில் உம்மைப் பற்றிய உண்மையைத் தேடவும், உம் திருமகனில் நீர் நிறைவேற்றிய மீட்புத் திட்டத்தைப் புரிந்துகொள்ளவும் மக்கள் அனைவருக்கும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. நீர் வாக்களித்த அனைத்தையும் எமக்கெனச் செய்து முடிக்கும் ஆண்டவரே!**

இம்மண்ணிலே புலம் பதித்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாங்களும், எங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவரும் உமது அன்பிலிருந்து எங்களைப் பிரிக்க முற்படும் எல்லாவித தீய சக்திகளையும் இனங்கண்டு அவற்றை முறியடித்து, உமக்கேற்றவர்களாக வாழ எமக்கு வேண்டிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. அன்புத் தந்தையே இறைவா!**

உமது அன்பையும், இரக்கத்தையும் பெற்று மகிழும் நாங்கள் அனைவரும், ஒருவர் ஒருவரை மன்னித்து, மற்றவர்களோடு பகிர்ந்து உமது சாட்சிகளாய் வாழ எமக்கு அருள் தந்து எம்மை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. அன்புத் தந்தையே இறைவா!**

எமது பிள்ளைகளை உமக்குக் காணிக்கையாக்குகின்றோம். அவர்கள் உமது வார்த்தையை ஆர்வமுடன் கேட்டு உமது சாட்சிகளாய் வாழ அவர்களுக்கு அருள் தந்து அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.